**மினிப்பே பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மே 18 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஜுன் 01 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 14 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

----------------------

நிதிக் கூற்றுக்களானவை மினிப்பே பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதி சார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-----------------------------------------------

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2006 ஆண்டின் போது சனசமூக நீர்ச் செயற்திட்டதில் இருந்து சபைக்கு கிடைத்து சபையினால் பயன்படுத்தப்படும் ரூபா 172,990 தொகை பெறுமதியான CPMO-4995 மற்றும் CPMO-5001 இலக்கங்களைக் கொண்ட 02 மோட்டார் சைக்கிள்களின் உரிமையை உரித்தாக்குவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அத்துடன், கணக்கீட்டு குறிப்புக்களின் மூலம் வெளிப்படுத்தியும் இருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது கூட்டுத்தொகை ரூபா 15,240 இற்கான நூலக அங்கத்தவர்களின் சேர்ப்புக் கட்டணம் மற்றும் அங்கத்துவத்தை புதுப்பித்தல் கட்டணம் ஆண்டிற்கான வருமானம் ஒன்றென கணக்கீடு செய்யப்படாமல் பொது வைப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

1.3.2 தொங்கல் கணக்குகள்

---------------------------------------

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தொங்கல் கணக்கின் மீதி ரூபா 13,369 இற்கான மீதி தொடர்பாக தேடிப்பார்த்து, தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

1.3.3 பெற வேண்டிய கணக்குகள்

-------------------------------------------------

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 10 பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 67,280,370 ஆக காணப்பட்டதுடன், அவற்றில் 01 வருட காலத்தை மிகைத்துள்ள கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 5,155,958 ஆக காணப்பட்டது.

1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

-----------------------------------------------------------

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 62,720,988 இற்கான செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதியில் ரூபா 62,372,907 இற்கான நிர்மாண வேலை கடன்கொடுத்தோர் ஆகக் காணப்பட்டதுடன், அவற்றில் 01 வருட காலத்தை மிகைத்துள்ள நிர்மாண வேலைக் கடன்கொடுத்தோர் பெறுமதி ரூபா 2,250,333 தொகையாகும்.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

04 கணக்கு விடயங்கள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால், கூட்டுத்தொகை ரூபா 52,014,084 இற்கான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாதுள்ளது.

1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங் களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
| --- | --- |
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவை | |
| பிரிவு 177 மற்றும் 178 | கேள்வி நடைமுறைமை கடை பிடிக்கப்படாமல் ரூபா 7,616,231 தொகை பெறுமதியான 30 நிர்மாண வேலைகள் சனசமூக அடிப்படை அமைப்புக்களுக்கு சாட்டப்பட்டிருந்தன. |
| (ஆ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| நி.பி. 571(2) | 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 06 சந்தர்ப்பங்கள் தொடர்பாக ரூபா 42,674 இற்கான காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 9,784,629 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 12,059,656 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 2,275,027 இற்கான வீழ்ச்சி ஒன்று காணப்பட்டது.

2.2 வருமான நிருவாகம்

மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 8,809,019 இற்கான நிலுவை வருமான மீதியொன்று காணப்பட்டது.

2.2.1 வீத வரி

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு ரூபா 443,421 இற்கான மீதியொன்று காணப்பட்டதுடன், ஆண்டிற்கான சிட்டையிடல் ரூபா 530,335 ஆகும். அம் மீதிகளில் இருந்து ஆண்டின் போது அறவீடு செய்த சதவீதம் முறையே நூற்றிற்கு 18 மற்றும் நூற்றிற்கு 69 ஆக காணப்பட்டதினால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 530,183 இற்கான மீதியொன்று நிலுவையாக காணப்பட்டதுடன், அதற்காக பிரதேச சபை சட்டத்தின் பிரிவுகள் 158(1) மற்றும் 159(1) இன் பிரகாரம் நிலுவை மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.2 வாடகை

----------------

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் ரூபா 1,489,568 இற்கான மீதி ஒன்று காணப்பட்டதுடன், ஆண்டின் போது சிட்டையிடப்பட்டவைகள் ரூபா 989,999 ஆக இருந்தது. ஆண்டின் போது அறவீடுகள் முறையே நூற்றிற்கு 13 மற்றும் நூற்றிற்கு 24 உம் அறவிடப்பட்டிருந்தமையால் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 2,277,456 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது. அதனை முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 53 சதவீத முன்னேற்றம் ஒன்று காணப்பட்டது.

2.2.3 நீர்க் கட்டணம்

-------------------------

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு ரூபா 1,879,022 இற்கான நிலுவை மீதி ஒன்று காணப்பட்டதுடன் ஆண்டின் போது அந்நிலுவை மீதியில் அறவீடுகள் 49 சதவீதமான பலவீன நிலை காணப்பட்டது. மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 2,153,106 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது.

2.2.4 முத்திரைக் கட்டணம்

--------------------------------------

மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முத்திரைக் கட்டணம் ரூபா 268,400 தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது. அத் தொகையில் 2015 ஜூலை 31 திகதி வரை ரூபா 80,820 இற்கான தொகையொன்று மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

-----------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 61,987,740 இற்கான தற்காலிக பெறுமதி மதிப்பீட்டின் மீது கணக்கீடு செய்யப்பட்ட 66 காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக முறையே முறையான பெறுமதி மதிப்பீடு ஒன்றினைப் பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 623,957 தொகை பெறுமதியான 03 நடைமுறை சொத்து மீதிகள் மற்றும் 02 நடைமுறை பொறுப்புக்கள் மீதிகள் 04 வருடங்கள் முதல் 12 வரையான காலம் முதல் முன்கொண்டு வரப்பட்டுக் காணப்பட்டுள்ளதுடன் அந்த கணக்கு மீதிகளைத் தீர்ப்பதற்காக அல்லது பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்காக செயற்பட்டிருக்கவில்லை.

(இ) மொரயாய நூலகத்திற்காக பாதுகாப்பு அரைச் சுவர் அல்லது வேலி ஒன்று காணப்படாமையால் நூலக வளவில் அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன என அவதானிக்கப்பட்டது.

(ஈ) மினிப்பே 07 வது மைல் தூண் வாராந்த சந்தைக்காக பாதுகாப்பு வேலி அல்லது எல்லையை அடையாளரம் பண்ணியிருக்கவில்லை. அத்துடன், அங்கு அங்கீகாரம் இன்றிய நிரந்தர கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அந்த கட்டிடத்திற்காக மின்சாரம் தொடர்பும் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அதே போல் வாராந்த சந்தைக்கு அண்மையில் அமைந்துள்ள 02 வீடுகளுக்காக வேறு நுழை பாதைகள் இருக்கும் போது சந்தை வளவின் ஊடாக நுழை பாதையாக பயன்படுத்துவதற்கு வசதி வழங்கியுள்ளது. சந்தை வளவின் மத்தியில் மின் கம்பிக் கம்பம் ஒன்று புதிதாக நடப்பட்டு அதன் மூலம் 02 வீடுகளுக்காக மின்சாரம் பெறுவதற்காக பயன்படுத்தி இருந்தது.

(உ) 1568 நீர் நுகர்வோரை மாத்திரம் கொண்டிருந்த 12 நீர் வழங்கள் திட்டங்களை சபை கொண்டிருந்தது. இவற்றில் மீளாய்வாண்டின் போது ரூபா 2,340,300 தொகையான வருமானம் ஒன்றினை உழைத்துள்ளது. நீர் மூலவளங்கள் மூலம் பெறப்படும் நீர், சுத்திகரிப்பு ஊட்டிகளை பயன்படுத்தி சுத்திகரித்து அல்லது வடி ஒன்றினை பயன்படுத்தி வடிகட்டாமல் நேரடியாகவே தொட்டிக்கு பெற்றுக்கொள்ளப்பட்டு நீர் நுகர்வோர்களுக்கு விநியோகிக்கப்பட்டிருந்தது. இறந்த சிறு பிராணிகளின் உடம்புகள்

மற்றும் ஏனைய கழிவுப் பொருட்கள் சேர்வதன் மூலம் நீர் அசுத்தமடைகின்றது. அத்துடன் நீரைச் சுத்திகரிப்பதற்காக நடைமுறை எதுவும் கடைபிடிக்கப்படாமல் நீர் நுகர்வோருக்கு நீரை விநியோகிக்கப்பட்டிருந்தாக 2015 ஜுலை 16 திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

3.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறைபயன்பாட்டு சொத்துக்கள்

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 2,110,950 பெறுமதியான 04 வாகனங்கள் ஒரு வருட காலம் முதல் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது.

4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுமையும்

4.1 கூட்டிணைப்புத் திட்டம்

மீளாய்வாண்டின் போது சபையினால் கூட்டிணைப்புத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

4.2 பெறுகைகள் திட்டம்

ரூபா 35,255,447 இற்கான மூலதன செலவுகள் சபையினால் மேள்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான பெறுகைகள் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

4.3 தொழிற்பாட்டுத் திட்டம்

சபையினால் மீளாய்வாண்டின் போது தொழிற்பாட்டு திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை.

4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

சபையினால் மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமைக்கப்பட்டிருக்காமையால் குழுக் கூட்டங்கள் நடைபெற்றிருக்கவில்லை.

4..5 அகக் கணக்காய்வு

மீளாய்வாண்டின் போது சபையினால் போதியளவான அகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4.6 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிராகரம் மதிப்பீட்டு வருமானங்கள் மற்றும் செலவுகள், உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகளுடன் இணக்கஞ் செய்யும் போது 04 வருமான விடயங்களில் நூற்றிற்கு 15 முதல் நூற்றிற்கு நூறு வரையும், 05 செலவு விடயங்களில் நூற்றிற்கு 15 முதல் நூற்றிற்கு 95 வரை மிகைத்தும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்